***DEPOSITION OF WITNESS***
*(Chapter XXIII Code of Criminal Procedure)*
- - - - -

## *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| ***Case No.*** | : | ***SC No. 14/2020*** |
| ***Deposition of witness for*** | : | ***PW : 1*** |
| ***Name*** | : | திருமதி. ஆறுமுகம் |
| ***Father's Husband's Name*** | : | |
| ***Village*** | : | |
| ***Taluk*** | : | |
| ***Caste*** | : | |
| ***Calling*** | : | |
| ***Religion*** | : | |
| ***Age*** | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* **08.07.2025**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை மேலஅனுப்பானடியில் குடியிருந்து வருகிறேன். நான் என் கணவர் மற்றும் 4 பிள்ளைகளோடு குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி மூவரையும் தெரியும். 1 வது எதிரி ஆனந்தியின் மகன். 2 வது எதிரி 1 ம் எதிரியின் கணவர். கடந்த 28.03.2015 ம் தேதி சுமார் இரவு 7 முதல் 8 மணிக்குள் தல்லாகுளம் பெருமாள் கோவில் அருகில் பூக்கடை வைத்துள்ள லீலா என்பவரை பார்க்க போயிருந்தேன். எனக்கும் 3 வது எதிரி ஆனந்திக்கும் சுமார் 5 ஆண்டு காலமாக பழக்கம் வழக்கம். அதனடிப்படையில் ஆனந்தியிடம் ரூ.50,000 கடனாக வாங்கியிருந்தேன். அந்த கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான பிரச்சனை சம்பவத்திற்கு 1 வாரத்திற்கு முன்பிருந்து ஓடிக்கொண்டிருந்தது. அப்போது நான் சுமார் 7 மணியளவில் பெருமாள் அருகில் லீலாவிடம் பேசிக்கொண்டிருந்தேன்.

ஆஜர் எதிரிகள் மூவரும் அங்கு வந்தார்கள். அப்போது விக்னேஷ் கண்ணன் என்பவர் ஏண்டி தேவிடியா மகளே நீ எல்லாம் இங்க வந்து ஏரியா விட்டு ஏரியா வந்து பணம் கேட்டு வருவியா என்று கேட்டு, ஆனந்தியும் தர்மரும் என்னை பிடித்துக் கொண்டார்கள். விக்னேஷ் கண்ணன் கத்தியால் என்னை 11 இடங்களில் குத்தினார். நடு வயிறு, ஈரக்குலை, வலது வயிற்றுக்கு பின்பகுதி, உயிர்தளத்தில் இரண்டு குத்து, இடது கையில் மேற்புறம் 3 குத்து, இடது பக்க நெற்றியில் குத்தி காயப்படுத்தினார். 28 நாட்கள் நான் மருத்துவனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். நான் சிகிச்சையில் சேர்ந்த உடன் நீதித்துறை நடுவர் என்னிடம் மரணம் வாக்குமூலம் பெற்றார். நீதிபதியிடம் நான் நடந்த விபரங்களை சொன்னேன். சாட்சியின் நடு வயிற்றில் காயத்தழும்பு அடிவயிறு வரை உள்ளது. நெற்றியில் தழும்பு உள்ளது. தல்லாகுளம் போலீசார் மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்தார்கள். நான் அவர்களிடம் நடந்த சங்கதிகளை சொன்னேன். புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அதசாஆ**.1. 1 வது எதிரி பயன்படுத்திய கத்தியை என்னால் அடையாளம் காட்ட இயலும்.

<u>**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :**</u>

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை